## PART - A

1. மாறன் தன் நண்பன் இனியனிடம் ''இந்த மாறன் ஒரு நாளும் நேரம் தவறமாட்டான்'' என்று கூறுவது :

(A) மரபு வழுவமைதி

(B) கால வழுவமைதி

(C) இட வழுவமைதி

(D) பால் வழுவமைதி

2. 'வானம் வசப்படும்' என்ற பிரபஞ்சனின் படைப்பு :

(A) கவிதை நூல்

(B) வரலாற்றுப் புதினம்

(C) சிறுகதைத் தொகுப்பு

(D) சூழலியல் கட்டுரை

3. கால வழுவமைதியைத் தேர்க.

(A) இந்த மகிழன் ஒரு நாளும் பொய் கூறமாட்டான்.

(B) தமிழினி இரவு சோறு உண்டான்.

(C) வீட்டில் காகம் கத்தினால் உறவினர் வருவர்.

(D) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.

4. கண்ணிற்குக் காட்சி தராமல் அரியனவாய் இருக்கும் மலரைத் தேர்க.

(A) நெருஞ்சி மலர்

(B) பூளை மலர்

(C) பலா மலர்

(D) கள்ளி மலர்

5. ''பெண்ணினைப் பாகம் கொண்ட
பெருந்தகைப் பரமயோகி
விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன்
கேட்டு வானோர்''

- இவ்வடிகளில் பாண்டியனைக் குறிக்கும் சொல்லைத் தேர்க.

(A) பரமயோகி

(B) மீனவன்

(C) பெருந்தகை

(D) வானோர்

6. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | காலக்கணிதம் | (i) | கீரந்தையார் |
| (b) | மேகம் | (ii) | அதிவீரராம பாண்டியன் |
| (c) | காசிக்காண்டம் | (iii) | கண்ணதாசன் |
| (d) | பரிபாடல் | (iv) | நாகூர்ரூமி |

(A) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)

(B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

(C) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

(D) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)

7. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | வீசு தென்றல் | (i) | பண்புத் தொகை |
| (b) | நன்மொழி | (ii) | உம்மைத் தொகை |
| (c) | அண்ணன் தம்பி | (iii) | இருபெய-ரொட்டுப் பண்புத் தொகை |
| (d) | சாரைப் பாம்பு | (iv) | வினைத் தொகை |

(A) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)

(B) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

(C) (a)-(iv), (b)-(i), (c)-(ii), (d)-(iii)

(D) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)

8. அரசனின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணையைப் பாடுவது :

(A) பெருந்திணை

(B) வாகைத் திணை

(C) பொதுவியல் திணை

(D) பாடாண்திணை

9. அகவற்பாவுக்குப் **பொருந்தாத** நூலைத் தேர்க.

(A) மணிமேகலை

(B) சிலப்பதிகாரம்

(C) பெருங்கதை

(D) நாலடியார்

10. 'உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்

செந்தீச் சுடரிய ஊழியும்; பனியொடு'

- இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள பண்புத் தொகைச் சொல்லைத் தேர்க.

(A) ஊழி ஊழ்

(B) உந்து வளி

(C) ஊழியும்

(D) செந்தீ

11. கொற்கையின் அரசனாகவும், புலவராகவும் இருந்தவர் :

(A) செங்குட்டுவன்

(B) நெடுஞ்செழியன்

(C) கீரந்தையார்

(D) அதிவீரராம பாண்டியர்

12. கோபல்லபுரத்து மக்கள் என்ற புதினம் :

(A) பெண் விடுதலையைப் பின்னணி-யாகக் கொண்டது.

(B) பழந்தமிழர் பண்பாட்டினை மைய-மாகக் கொண்டது.

(C) விளிம்புநிலை மக்கள் வாழ்வை மையமாகக் கொண்டது.

(D) இந்திய விடுதலைப் போராட்டத்-தைப் பின்னணியாகக் கொண்டது.

13. ''உனக்குப் படிக்கத் தெரியாது''

- என்ற நூல் யாரை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது.

(A) மருத்துவர் முத்துலெட்சுமி

(B) மேரி மெக்லியோட் பெத்யூன்

(C) கமலாலயன்

(D) மிஸ் வில்ஸன்

14. 'இரங்கலும் இரங்கல் நிமித்தமும்' என்னும் உரிப்பொருளுக்குரிய திணை :

(A) நெய்தல்

(B) குறிஞ்சி

(C) பாலை

(D) மருதம்

15. கோவலன் கண்ணகி கதையைக் கூறி, 'அடிகள் நீரே அருளுக' என்றவர் :

(A) கம்பர்

(B) சீத்தலைச் சாத்தனார்

(C) இளங்கோவடிகள்

(D) வீரமாமுனிவர்

16. 'எற்பாடு' என்பது :

(A) பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

(B) முன்பனிக்காலம்

(C) ஞாயிறு மறையும் நேரம்

(D) காலை 6 மணி முதல் 10 மணி வரை

17. ''இல் நுழை கதிர்'' என்னும் சொல்லின் பொருளினைத் தேர்ந்தெடுக்க.

(A) இல்லத்துள் நுழையும் விளக்கின் ஒளிக்கற்றை

(B) இல்லத்துள் நுழையாத விளக்கின் ஒளிக்கற்றை

(C) இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக்கற்றை

(D) இல்லத்துள் நுழையாத கதிரவனின் ஒளிக்கற்றை

18. **கூற்று (1) :** வலிமையை நிலைநாட்ட நடைபெற்ற போரில் வெற்றி பெற்ற அரசர் தும்பைப் பூவைச் சூடி மகிழ்வர்.

**கூற்று (2) :** வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட பகையரசர்கள் இருவர் தத்தம் வலிமையை நிலைநாட்ட வாகைப் பூவைச் சூடி மகிழ்வர்.

(A) **கூற்று (1), (2)** இரண்டும் சரி

(B) **கூற்று (1), (2)** இரண்டும் தவறு

(C) **கூற்று (1)** சரி, **கூற்று (2)** தவறு

(D) **கூற்று (1)** தவறு, **கூற்று (2)** சரி

19. இலையின் பெயரைக் குறிக்காத சொல்லைத் தேர்ந்தெடுக்க.

(A) தாள்

(B) கழை

(C) ஓலை

(D) தோகை

20. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று அளித்த உணவாகச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடும் உணவு :

(A) தினைச் சோறு

(B) குழல் மீன் கறி

(C) தேனும் தினைமாவும்

(D) ஊன் சோறு

21. தீண்டாமைக்கு எதிராக நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தியவர் :

(A) பாரதிதாசன்

(B) திரு.வி.க.

(C) அம்பேத்கர்

(D) பெரியார்

22. வடமொழிக் கதையைத் தழுவி எழுதப்பட்ட நூல் :

(A) சீவகசிந்தாமணி

(B) சிலப்பதிகாரம்

(C) மணிமேகலை

(D) பெரியபுராணம்

23. பொதுமொழியைத் தேர்க.

(A) கண்ணன்

(B) படித்தான்

(C) வேங்கை

(D) மலர்

24. 'கலைஞர்' என்னும் சிறப்புப் பெயர் மு. கருணாநிதிக்கு வழங்கப்பட்ட விழா :

(A) 'பழநியப்பன்' நாடகப் பாராட்டு விழா

(B) செம்மொழி மாநாட்டு விழா

(C) தூக்கு மேடை நாடகப் பாராட்டு விழா

(D) பராசக்தி வெற்றி விழா

25. பாவலரேறுவால் பாடப்பட்டுத் தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த நூல் எது ?

(A) நூறாசிரியம்

(B) மகபுகு வஞ்சி

(C) உலகியல் நூறு

(D) திருக்குறள் மெய்ப்பொருளுரை

26. எதிர்மறைத் தொழிற்பெயரைத் தேர்க.

(A) வாழ்க்கை

(B) நடவாமை

(C) ஈதல்

(D) காட்சி

27. 'வேம்பு, ஆமணக்கு' இவற்றைக் குறிக்கும் சொல் :

(A) கூலம்

(B) முத்து

(C) விதை

(D) முதிரை

28. 'விருந்தே புதுமை' - என்றவர் :

(A) தொல்காப்பியர்

(B) இளங்கோவடிகள்

(C) கம்பர்

(D) திருவள்ளுவர்

29. **கூற்று (1) :** ஆசிரியப்பா ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

**கூற்று (2) :** இரண்டடி முதல் பன்னிரண்டு அடிவரை அமைவது ஆசிரியப்பா ஆகும்.

(A) **கூற்று (1), (2)** இரண்டும் சரி

(B) **கூற்று (1)** சரி, **கூற்று (2)** தவறு

(C) **கூற்று (1)** தவறு, **கூற்று (2)** சரி

(D) **கூற்று (1), (2)** இரண்டும் தவறு

30. சங்ககாலப் பெண்களைப்போலவே, இக்காலப் பெண்களும் கல்விகற்றுத் தம் வாழ்க்கையைத் தாமே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெறவேண்டும் என்றவர் :

(A) பாரதியார்

(B) திரு.வி.க

(C) கவிமணி

(D) அயோத்திதாசர்

க்கும்

## PART - B

31. நாட்டுப்புற நம்பிக்கைகள் தோன்றிய வரலாற்றை 'நாட்டுப்புற நம்பிக்கைகள்' என்ற நூலில் எடுத்துக்காட்டுடன் விளக்கியவர் யார் ?

(A) நரேந்திரநாத் பட்டாச்சாரியா

(B) ரூத் பெனிடிக்ட்

(C) தமிழவன்

(D) ரெட்கிளிப் பிரௌவ்ன்

32. 'மைக்ரோலிதிக்' என்பதில் 'லித்திக்' என்ற சொல்லின் பொருள் :

(A) குகை

(B) மண்

(C) மணி

(D) கல்

33. பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் பெரிய புராணத்தைப் பதிப்பித்த ஆண்டு :

(A) 1934

(B) 1940

(C) 1990

(D) 1993

34. எருத்தைப் 'பாண்டில்' என்று கூறுவது :

(A) சிங்களச் சொல்

(B) துளுவச் சொல்

(C) தெலுங்குச் சொல்

(D) தமிழ்ச் சொல்

35. பலபட்டடை என்பதன் பொருள் :

(A) போர்க்களம்

(B) வசைச் சொல்

(C) பண்டமுள்ள அறை

(D) முறைச்சொல்

36. 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' என்ற தொல்காப்பியத் தொடருக்குச் சான்றாகத் தோன்றிய சிற்றிலக்கியம் :

(A) உலா

(B) பிள்ளைத்தமிழ்

(C) சதகம்

(D) மடல்

37. நற்றிணையில் கடவுள் வாழ்த்துப் பாடியவர் :

(A) பெருங்குன்றூர் கிழார்

(B) பெரும்பதுமனார்

(C) பெருங்கடுங்கோ

(D) பாரதம் பாடிய பெருந்தேவனார்

38. ''பின்னி முடிச்சிடம்மா பிச்சிப்பூச் சூட்டிடம்மா

என்னும் மொழிகளினி எக்காலம் கேட்பனையா ?

நெஞ்சிற் கவலையெல்லாம் நிற்காமல் ஓட்டும் அந்தப்

புஞ்சிரிப்பைக் காணாது புத்தி தடுமாறுதையா!''

என்று மனம் கசிந்துருகி கவிமணி பாடிய நூல் :

(A) மலரும் மாலையும்

(B) ஆசியஜோதி

(C) உமர்கய்யாம் பாடல்கள்

(D) தேவியின் கீர்த்தனைகள்

39. சொல்லிடையே காணப்படும் ஒலிப் புடைய, ஒலிப்பிலாத் தடையொலிகளை 'வல்லொலி மெல்லொலி மாற்ற நியதி' என்று பெயரிட்டவர் :

(A) சு. சக்திவேல்

(B) கால்டுவெல்

(C) தெ.பொ.மீ

(D) பெஸ்கி

40. மத்தியதர வர்க்கத்தினரது வாழ்க்கையின் அடியாகத் தோன்றும் உணர்ச்சிக் கட்டங்களைச் சித்தரிக்கும் சிறுகதை :

(A) அகல்யை

(B) அடிச்சாரைச் சொல்லியழு

(C) வாழ்க்கையோ வாழ்க்கை

(D) விடியுமா

41. திருவள்ளுவ மாலையைத் 'திறனாய்வு நூல்' என்று கூறியவர் :

(A) ஏ.வி. சுப்பிரமணியம்

(B) மு. வரதராசன்

(C) எஸ். வையாபுரி

(D) வ.உ. சிதம்பரம்

42. ''நீரிடை உறங்கும் சங்கம்

நிழலிடை உறங்கும் மேதி''

இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள படலம் :

(A) ஆற்றுப்படலம்

(B) நாட்டுப்படலம்

(C) நகரப்படலம்

(D) அரசியற்படலம்

43. ''முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே

பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியளே ''

- என்ற அடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ?

(A) திருமுருகாற்றுப்படை

(B) திருவெம்பாவை

(C) அற்புதத்திருவந்தாதி

(D) திருப்பாவை

44. 'தோதர் மொழி' அறியப்பட்ட ஆண்டு :

(A) 1837

(B) 1849

(C) 1853

(D) 1866

45. 301 அடிகளால் பாடப்பெற்ற நூல் :

(A) முல்லைப்பாட்டு

(B) குறிஞ்சிப்பாட்டு

(C) பட்டினப்பாலை

(D) மதுரைக்காஞ்சி

46. 'கடுவனும் அறியும், அக்கொடி யோனையே' - யார் கூற்று ?

(A) தலைவி

(B) தோழி

(C) நற்றாய்

(D) செவிலி

47. இராம காதையை முழுவதுமாகக் கூறும் ஹொபுட் சுஷு (Hobut Sushu) எனும் ஜப்பானிய நூலின் காலம் :

(A) 10 ஆம் நூற்றாண்டு

(B) 11 ஆம் நூற்றாண்டு

(C) 12 ஆம் நூற்றாண்டு

(D) 13 ஆம் நூற்றாண்டு

48. **கூற்று-1** : சைவத்திற்கு மாணிக்கவாசகர் போல, வைணவத்திற்கு நம்மாழ்வார்.

**கூற்று-2** : திருவாசகப்போக்கினையும், தேவாரச் சொற்றொடர்களையும் எடுத் தாண்டுள்ளார்.

இவற்றுள்,

(A) **கூற்று 1** சரி ஆனால் **கூற்று 2** தவறு

(B) **கூற்று 1** மற்றும் **கூற்று 2** இரண்டும் சரி

(C) **கூற்று 1** மற்றும் **கூற்று 2** இரண்டும் தவறு

(D) **கூற்று 1** தவறு ஆனால் **கூற்று 2** சரி

49. நாட்டுப்புற விளையாட்டுக்களில் சிலம்பாட்டம், மலையாள மொழியில் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

(A) லாட்டி

(B) டல்லாக்கடி

(C) லாடிகீலா

(D) நெடுவடி

50. நாஞ்சில் நாட்டுத் தமிழை மாற்றிலக்கண அடிப்படையில் ஆராய்ந்து நூலாக வெளியிட்டவர் யார் ?

(A) பேரறிஞர் அகத்தியலிங்கம்

(B) டாக்டர் கருணாகரன்

(C) பேராசிரியர் செ.வை. சண்முகம்

(D) டாக்டர் கபில் சுவலபில்

51. சாங்கிய சூத்திரம் என்ற நூலை எழுதியவர் யார் ?

(A) கபிலர்

(B) ஐ. மகாதேவன்

(C) முனைவர் உ. கருப்பதேவன்

(D) புலவர் அ. நக்கீரன்

52. சாகித்திய அகாதெமியின் தமிழ்ச் சிறுகதை நூலுக்கு முதன் முதலில் பரிசு பெற்றவர் :

(A) புதுமைப்பித்தன்

(B) கு. அழகிரி சாமி

(C) திலகவதி

(D) வண்ணதாசன்

53. முற்பிறவியில் மணிமேகலையின் தாய் :

(A) இலக்குமி

(B) கோதமை

(C) நீலபதி

(D) அமுதபதி

54. 'திருஆவினன் குடி' என்று அழைக்கப் படும் ஊர் :

(A) சுவாமிமலை

(B) திருச்செந்தூர்

(C) பழநி

(D) திருத்தணிகை

55. "ஒன்றென்றிரு! தெய்வம் உண்டென்றிரு!" எனும் பாடலைப் பாடியவர் யார் ?

(A) திருநாவுக்கரசர்

(B) குமரகுருபரர்

(C) பட்டினத்தார்

(D) வள்ளலார்

56. ஐங்குறுநூற்றில் முன்னிலைப் பத்து பாடியவர் :

(A) பேயனார்

(B) அம்மூவனார்

(C) ஓதலாந்தையார்

(D) ஓரம் போகியார்

57. குறிப்பிட்ட ஓர் இலக்கியத்தின் தரத்தை ஆய்வது இலக்கியத் திறனாய்வாகும் என்று கருத்துரைப்பவர் :

(A) ஆபர்குரோம்பி

(B) தில்தி (Dilthy)

(C) டி.எஸ். எலியட்

(D) ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ்

58. பொருள்நசை வேட்கையோன் முறை செயல் ________.

(A) மெய்

(B) பொய்

(C) நன்று

(D) ஒன்று

59. பெரும்பாணாற்றுப் படையில் முல்லை நில மக்கள் பண்டமாற்று முறையில் தயிரையும் மோரையும் குறிஞ்சி நில மக்களிடம் கொடுத்து எதை வாங்கினர் ?

(A) தேன்

(B) நெல்

(C) வரகு

(D) தினை

60. திறனாய்வாளர்கள், படைப்பவனை உறிஞ்சிப் பிழைக்கிற ஒட்டுண்ணிகள் என்ற கருத்து பரவலாக இருப்பதைச் சுட்டிக்காட்டியவர் :

(A) ஐ.ஏ. ரிச்சர்டு

(B) டி.எஸ். எலியட்

(C) க.த. திருநாவுக்கரசு

(D) நார்த்தராய் ப்ரை

61. 'திருவாசக வியாக்கியானம்' என்னும் 'திருவாசக அனுபூதி உரை' யாரால் எழுதப் பட்டது ?

(A) கா. சுப்பிரமணிய பிள்ளை

(B) அருணாசலக் கவிராயர்

(C) சீர்காழி தாண்டவராயர்

(D) மறைமலையடிகள்

62. அகத்திணைக்குப் பொருந்தாத புறத்திணையைத் தேர்ந்தெடுக்க.

(A) முல்லை x வெட்சி

(B) மருதம் x உழிஞை

(C) நெய்தல் x தும்பை

(D) பாலை x வாகை

63. **கூற்று-1** : சிற்றிலக்கியங்களின் இலக் கணத்தைப் பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை ஆகிய நூல்கள் கூறுகின்றன.

**கூற்று-2** : சிற்றிலக்கியங்களின் இலக் கணத்தை நாட்டார் இலக்கியங்களும், காப்பிய இலக்கியங்களும் கூறுகின்றன.

(A) **கூற்று 1** சரி ஆனால் **கூற்று 2** தவறு

(B) **கூற்று 1** மற்றும் **கூற்று 2** சரி

(C) **கூற்று 1** மற்றும் **கூற்று 2** தவறு

(D) **கூற்று 1** தவறு ஆனால் **கூற்று 2** சரி

64. வெண்பாவிற்கு அகவுதலில்லாத ஓசை என்று குறிப்பிடும் நூல் :

(A) யாப்பருங்கலக்காரிகை

(B) யாப்பருங்கலம்

(C) தொல்காப்பியம்

(D) காக்கைப்பாடினியம்

65. 'யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை

ஏற்புழி யிசைப்பது' - எவ்வகை பொருள் கோள் ?

(A) கொண்டுகூட்டு

(B) அளைமறிபாப்பு

(C) தாப்பிசை

(D) யாற்றுநீர்

66. வரலாற்றுக் காலத்தில் உருவாக்கப்பட்ட கோவில்களின் கட்டடக் கலை :

| பட்டியல் - I | | பட்டியல் - II |
|---|---|---|
| (1) கல்லறை | (i) | அர்த்தமண்டபம் |
| (2) வாயில் | (ii) | திருச்சுற்று |
| (3) கல்வட்டம் | (iii) | வாயில் பகுதி |
| (4) இடுதுளை | (iv) | கருவறை |

(A) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)
(B) (1) - (iv), (2) - (i), (3) - (ii), (4) - (iii)
(C) (1) - (i), (2) - (ii), (3) - (iv), (4) - (iii)
(D) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

67. மனிதனின் மூதாதைகளான தலைமிகள் எந்த ஊழிக்காலத்தில் தோன்றின ?

(A) தொல் பேரூழிக் காலம்

(B) இடைப் பேரூழிக் காலம்

(C) ஆலோசியன் ஊழிக்காலம்

(D) கடைப் பேரூழிக் காலம்

68. உறுதிக்கூற்று (உ): இனிமை என்பது தமிழுக்கு ழகரத்தால் மட்டும் ஏற்பட்டதன்று.

காரணம் (கா) : எழுத்தினிமை போன்றே, சொல்லினிமை, செய்யுளினிமை எனப் பிற இனிமைகளுமுண்டு.

இவற்றுள் சரியானது :

(A) (உ) தவறு மற்றும் (கா) தவறு

(B) (உ) சரி மற்றும் (கா) சரி

(C) (உ) தவறு மற்றும் (கா) சரி

(D) (உ) சரி மற்றும் (கா) தவறு

69. திவிட்டன், விசயன் சிறப்பினைக் கூறும் நூல் :

(A) உதயண குமார காவியம்

(B) நாக குமார காவியம்

(C) யசோதர காவியம்

(D) சூளாமணி

70. நெறிமுறை ஹேக்கர்கள் என்று அழைக்கப்படுபவர் :

(A) வெள்ளைத் தொப்பி ஹேக்கர்கள்

(B) கருப்புத் தொப்பி ஹேக்கர்கள்

(C) சாம்பல் தொப்பி ஹேக்கர்கள்

(D) பல வண்ணத் தொப்பி ஹேக்கர்கள்

71. "தாய் ஆழங்காண முடியாத அன்புக்கடல், அக்கடலில் விளைந்த வலம்புரி முத்தே தாலாட்டு" என்று கூறியவர் யார் ?

(A) தமிழண்ணல்

(B) மு. அருணாசலம்

(C) வானமாமலை

(D) டாக்டர் ஆறு. அழகப்பன்

72. உரைக் களஞ்சியம் பல உடைய பெருநூலாய்த் திகழ்வது எந்நூல் ?

(A) பெருமாள் திருமொழி

(B) திருவாய்மொழி

(C) நாச்சியார் திருமொழி

(D) பெரியாழ்வார் திருமொழி

73. "தண்தமிழ்பொது எனப் பொறாஅன்" - என்று போற்றப்படும் அரசன் :

(A) மருதன்இளநாகன்

(B) மாறன் வழுதி

(C) மாந்தரஞ் சேரலிரும்பொறை

(D) குட்டுவன் கோதை

74. தமிழில் 'திறனாய்வு' என்ற சொல்லை முதன் முதலாகப் புழக்கத்தில் விட்டவர் :

(A) க.நா. சுப்பிரமணியம்

(B) தொ.மு.சி. ரகுநாதன்

(C) அ.ச. ஞானசம்பந்தன்

(D) நா. வானமாமலை

75. 'புலுதம்' எனும் சொல் எதனைக் குறிக்கின்றது ?

(A) ஆய்தம்

(B) அளபெடை

(C) மகரக்குறுக்கம்

(D) ஐகாரக்குறுக்கம்

76. ஆறறிவதுவே அவற்றொடு மனனே - எனக் கூறும் நூல் :

(A) நேமிநாதம்

(B) வீர சோழியம்

(C) நன்னூல்

(D) தொல்காப்பியம்

77. ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை அரணம் காப்போர் சூடிய பூப்புகழ்ந்தன்று - என்பது

(A) உழிஞைத்திணை

(B) நொச்சித்திணை

(C) காஞ்சித்திணை

(D) வஞ்சித்திணை

78. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | குளோரியா சுந்தரமதி | (i) | இலக்கியத் திறனாய்வியல் |
| (b) | திருமதி முருகு ரத்தினம் | (ii) | இலக்கியக்கலை |
| (c) | தா.ஏ. ஞான மூர்த்தி | (iii) | மேலை இலக்கியத் திறனாய்வு |
| (d) | அ.ச. ஞான சம்பந்தன் | (iv) | இலக்கியக் கொள்கைகள் |

(A) (a) - (ii), (b) - (i), (c) - (iii), (d) - (iv)
(B) (a) - (iv), (b) - (iii), (c) - (i), (d) - (ii)
(C) (a) - (iv), (b) - (i), (c) - (ii), (d) - (iii)
(D) (a) - (i), (b) - (ii), (c) - (iii), (d) - (iv)

79. வரதன் என்கிற இயற்பெயர் கொண்டு தனிப்பாடல் பாடிய புலவர் :

(A) காளமேகம்

(B) தத்துவராயர்

(C) ஒட்டக்கூத்தர்

(D) உதிசித் தேவர்

80. 'ஆய்தல்' என்பதற்கு உள்ளதன் நுணுக்கம் என்று கூறும் நூல் :

(A) தொல்காப்பியம்

(B) இறையனார்களவியல் உரை

(C) நன்னூல்

(D) தொன்னூல்

81. லெமூரியாக் கண்டம் :

(1) கடல்கோள்களுக்குட்பட்டு மூழ்கிப் போன நிலப்பகுதி.

(2) சர். வால்டர் ராலே, பேராசிரியர் ஹெக்கல், சர். ஜான், ஈவான்ஸ் ஸ்கார்ட் எலியட், சர்.ஜே. டபிள்யூ ஹோல்டர்னஸ் இந்நிலப்பகுதியைப் பற்றி ஆய்வு மேற்கொண்டனர்.

(3) மக்களினம் முதன்முதலில் தோன்றியது.

(4) லெமூரியாக் கொள்கையை உருவாக்கினர்.

(A) (1), (2), (3) மட்டும் சரி

(B) (2), (3), (4) மட்டும் சரி

(C) (1), (3), (4) மட்டும் சரி

(D) அனைத்தும் சரி

82. ரசனைமுறை (அ) அழகியல் திறனாய்வை ஓர் இயக்கம் போலவே நடத்தியவர் :

(A) எஸ். வையாபுரி

(B) சிதம்பர ரகுநாதன்

(C) டி.கே. சிதம்பரநாதன்

(D) ரா.பி. சேது

83. கதைப் பாடலின் மரபும் தன்மையும் குறித்து வரையறை செய்தவர் யார் ?

(A) ஹோல்ஜர் ஓலாப் நிகார்டு

(B) பிரிஸ்பெர்லி

(C) மாக் எட்வர்ட் லீக்

(D) டேவிட் புக்கன்

84. முத்துக் குமார சுவாமிப் பிள்ளைத் தமிழை இயற்றியவர் யார் ?

(A) பிள்ளைக்கவி

(B) சேக்கிழார்

(C) குமரகுருபரர்

(D) பகழிக் கூத்தர்

85. ஞானக் கலைவாழ் நகர் - எனச் சிறப்பிக்கப் பெறுவது :

(A) மாவிந்த நகர்

(B) குண்டினபுரம்

(C) அயோத்தி

(D) இராசபுரம்

86. ‘பெய்யெனப் பெய்யும் மழை’ - இந்தத் தொடர் இடம் பெற்ற நூல்கள் :

(A) திருக்குறள், நாலடியார்

(B) திருக்குறள், திரிகடுகம்

(C) திருக்குறள், பழமொழி நானூறு

(D) திருக்குறள், இனியவை நாற்பது

87. பரிபாடலில் பாடப்பட்டுள்ள கடவுள் :

(1) முருகன்

(2) திருமால்

(3) சிவன்

(4) பிரம்மன்

(A) (1), (2) சரி

(B) (2), (3) சரி

(C) (3), (4) சரி

(D) (1), (4) சரி

88. சிலப்பதிகாரத்தில் கற்புடை மங்கையர் எழுவர் இடம் பெறும் காதை :

(A) அரங்கேற்றுக்காதை

(B) கடலாடுகாதை

(C) அடைக்கலக்காதை

(D) வஞ்சினமாலை

89. தி. ஜானகிராமனின் எந்நாவல் திரைப்படமாக வெளிவந்துள்ளது ?

(A) அமிர்தம்

(B) மரப்பசு

(C) மோகமுள்

(D) ஜனரஞ்சகம்

90. கருமரையான் என்பது எதைக் குறிக்கிறது ?

(A) பாம்பின் வகை

(B) மாட்டின் வகை

(C) நெல்லின் வகை

(D) மீனின் வகை

91. ‘சங்க நூல்களில் விந்தைப் பூச்சி’ என்ற நூலினை எழுதியவர் :

(A) எம்.எஸ். சுவாமிநாதன்

(B) பி.எல். சாமி

(C) வானமாமலை

(D) ந. சுப்பு ரெட்டியார்

92. ‘சித்திரக்காலி’ என்பது என்ன ?

(A) பாசி

(B) மரம்

(C) துவரை

(D) நெல்

93. பண்டிதமணியைப் பற்றி முடியரசன் இயற்றிய காப்பியம் எது ?

(A) ஊன்றுகோல்

(B) வீரகாவியம்

(C) பூங்கொடி

(D) பிறைமதி

94. 'வானொலி அண்ணா' என அன்போடு அழைக்கப்படுபவர் :

(A) லோக சிகாமணி

(B) வடிவேல் இராவணன்

(C) எம்.எஸ். கோபால்

(D) இளசை எஸ். சுந்தரம்

95. சிலப்பதிகாரத்திலும் அதன் உரை நூல் களிலும் இடம் பெறும் ஊர்கள் :

(a) இடும்பில், இரவிபுரம், இருந்தையூர்

(b) இலங்காபுரம், உஞ்சை, உறந்தை

(c) கச்சி, கபாடபுரம், கபிலபுரம்

(d) ஆதியூர், பனையூர், ஏரியூர்

இவற்றுள் தவறானது :

(A) (a)

(B) (b)

(C) (c)

(D) (d)

96. கண்ணகி கருங்கணு மாதவி செங்கணும் உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன இப்பாடலடிகள் இடம் பெற்றுள்ள காதை :

(A) கடலாடு காதை

(B) அரங்கேற்று காதை

(C) வேனிற் காதை

(D) இந்திரவிழவூரெடுத்த காதை

97. இராகுலன் :

(1) உதயகுமரனின் முற்பிறவியின் பெயர்

(2) நீலபதியின் மகன்

(3) இலக்குமியின் கணவன்

(4) ஆபுத்திரனை எடுத்து வளர்த்தவன்

இவற்றுள் சரியானது :

(A) (1), (2), (4)

(B) (2), (3), (4)

(C) (1), (2), (3)

(D) (1), (3), (4)

98. 'மனச்சான்று', 'கிம்பளம்', 'காதல் எங்கே' போன்ற ஓரங்க நாடகங்களை இயற்றியவர் :

(A) மு. வரதராசனார்

(B) ஜெயகாந்தன்

(C) வ.சுப. மாணிக்கம்

(D) ஆறு. அழகப்பன்

99. தமிழக வரலாற்றில் முதன் முதலாக மேடையேற்றப்பட்ட நாடகம் :

(A) டம்பாச்சாரி விலாசம்

(B) கிருஷ்ணலீலா

(C) சிவல்லா

(D) தாசில்தார் விலாசம்

100. எட்டுத் தொகையில் ஐந்து புலவர்களால் பாடப்பட்ட நூல் :

(1) ஐங்குறுநூறு

(2) அகநானூறு

(3) பரிபாடல்

(4) கலித்தொகை

(A) (1), (2) சரி

(B) (1), (3) சரி

(C) (2), (4) சரி

(D) (1), (4) சரி

101. 1954 ஆம் ஆண்டு தமிழ்மொழிக்காகச் சாகித்ய அகாதெமியின் பரிசு பெற்ற நூல் :

(A) அலை ஓசை

(B) தமிழ் இன்பம்

(C) சித்திரப்பாவை

(D) அகல்விளக்கு

102. 'அழிந்து போன லெமூரியா' என்ற நூலின் ஆசிரியர் :

(A) கால்டுவெல்

(B) எல்லீஸ்

(C) எலியட் ஸ்காட்

(D) ஜி.யு. போப்

103. "இன்னே வருகுவர் தாயர் என்போள் நன்னர் நன்மொழி கேட்டனம்" - இப்பாடலடி இடம் பெற்ற நூல் :

(A) குறிஞ்சிப்பாட்டு

(B) பட்டினப்பாலை

(C) நெடுநல்வாடை

(D) முல்லைப்பாட்டு

104. **கூற்று-1** : தாழி என்பது மண்ணால் செய்து சுடப்படாத பெரிய மட்கலம்.

**கூற்று-2** : தாழியின் மேல், சுடுமண்ணால் மூடி ஒன்று மூடப்பட்டிருக்கும்.

இவற்றுள்,

(A) **கூற்று 1** சரி ஆனால் **கூற்று 2** தவறு

(B) **கூற்று 1** மற்றும் **கூற்று 2** இரண்டும் சரி

(C) **கூற்று 1** மற்றும் **கூற்று 2** இரண்டும் தவறு

(D) **கூற்று 1** தவறு ஆனால் **கூற்று 2** சரி

105. பெண்ணியத் திறனாய்வின் முன் முயற்சியாக இரண்டாம் பாலினம் என்னும் நூலை எழுதியவர் :

(A) கேட் மில்லட்

(B) சைமன் டி பௌவார்

(C) எலைன் ஷோவால்டர்

(D) வெர்ஜினியா வுல்ஃப்

106. நாட்டுப்புறத் தெய்வங்களுக்குக் கொண் டாடப்படும் விழாவைத் திருநெல்வேலி மாவட்டத்தில் எவ்வாறு குறிப்பிடுவர் ?

(A) பொங்கல் வைத்தல்

(B) சாமி கும்பிடுதல்

(C) கொடை

(D) குடி அழைப்பு

107. பெண் எழுத்தாளர்களின் எழுத்துகளை பெண்கள் மட்டுமே திறனாய்ந்து மதிப்பிட வேண்டும் என்னும் கைனோ கிரிட்டிசிசம் (Gyno Criticism) முறையை அறிமுகப் படுத்திய பெண்ணியச் சிந்தனையாளர் :

(A) சைமன் டி. பௌவார்

(B) கேட்மில்லட்

(C) வெர்ஜினியா வுல்ஃப்

(D) எலைன் ஷோவால்டர்

108. இராஜம் ஐயரின் கமலாம்பாள் சரித்திரம் ஆரம்பத்தில் வெளிவந்த பத்திரிகை :

(A) விவேக சிந்தாமணி

(B) எழுத்து

(C) தினமணி

(D) சித்ராவளி

109. வெய்யோன் பாடு - எத்திணைக்குரிய பொழுது ?

(A) குறிஞ்சி

(B) முல்லை

(C) மருதம்

(D) நெய்தல்

110. கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே
இவை எவ்வளவினுள் அடங்கும் என இளம்பூரணர் கூறுவர் :

(A) நெறித்தளத்தல்

(B) எண்ணியளத்தல்

(C) பெய்தளத்தல்

(D) சார்த்தியளத்தல்

111. 'ஓர் இரவு' நாடகம் யாருக்காக ஓர் இரவில் இயற்றப்பட்டது ?

(A) கே.ஆர். இராமசாமி

(B) சிவாஜி கணேசன்

(C) எம்.ஜி.ஆர்

(D) மனோகரன்

112. 'நால்வேதத்திற்குரிய ஆறங்கம் போன்ற நூல்களைப் பாடியவர்' என்று பாராட்டப் படுபவர் :

(A) திருமங்கையாழ்வார்

(B) பூதத்தாழ்வார்

(C) தொண்டரடிப்பொடியாழ்வார்

(D) பெரியாழ்வார்

113. ''ஓசை யொலியெலா மானாய் நீயே உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே'' எனத் தொடங்கும் பாடலடிகள் பாடப்பெற்ற தலம் எது ?

(A) திருவாரூர்

(B) திருமறைக்காடு

(C) திருவையாறு

(D) திருவீழிமிழலை

114. ஒளி அமைப்பு, திரைச்சீலை அமைப்பு, வசனம், உடை, ஒப்பனை ஆகியவற்றில் தொழில்நுட்ப முறைகளை உருவாக்கிய கம்பெனி :

(A) சுகுண விலாச நாடகச்சபை

(B) நேஷனல் தியேட்டர்ஸ்

(C) பாய்ஸ் நாடகக் கம்பெனி

(D) தஞ்சை நவாப் கம்பெனி

115. பெருந்திணை என்பது :

(a) அன்பின் ஐந்திணைக்கு மாறாக அமைவது

(b) பெருமைக்குரிய திணை

(c) பொருந்தாக் காமம்

(d) பெருவழக்காகப் பின்பற்றப்பட்ட திருமண முறை

இவற்றுள் சரியானது :

(A) (a), (b), (c) மட்டும்

(B) (a), (c), (d) மட்டும்

(C) (a), (b), (d) மட்டும்

(D) (a), (b), (c), (d) நான்கும்

116. தமிழ் விடு தூது எத்தனை கண்ணிகளை உடையது ?

(A) 311

(B) 118

(C) 369

(D) 268

117. தமிழக வரலாற்றில் முதன்முதலில் ஆதிச்ச நல்லூர் அகழாய்வு மேற்கொண்ட வெளிநாட்டு ஆய்வாளர் யார் ?

(A) சர். ஜான் மார்ஷல்

(B) ஜாகர்

(C) வால் ஹவுஸ்

(D) புரூஸ் பூட்

118. கொடிய விலங்குகளாலோ, வேறு காரணங்களாலோ உண்டாகிய புண்ணை ஆற்றுவதற்கு இசைபாடும் வழக்கம் இருந்தது என்பதைப் பதிவு செய்தவர் :

(A) கடியலூர் உருத்திரங்கண்ணனார்

(B) பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

(C) இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

(D) நக்கீரர்

119. திருவருட்பாவினை முதன்முதலில் பதிப்பித்தவர் யார் ?

(A) சி.வை. தாமோதரம் பிள்ளை

(B) தொழுவூர் வேலாயுத முதலியார்

(C) உ.வே. சாமிநாதய்யர்

(D) பின்னத்தூர் அ. நாராயணசாமி

120. சிலப்பதிகாரத்தை, ‘சிறப்பதிகாரம்’ என்று கூறியவர் :

(A) நக்கீரர்

(B) மு.வ

(C) க.நா.சு

(D) உ.வே.சா

P.T.O.

121. "ஐயா, அருணகிரி அப்பா! உனைப்போல மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார் ?" எனப் பாராட்டியவர் :

(A) வள்ளலார்

(B) சிவஞானமுனிவர்

(C) பட்டினத்தார்

(D) தாயுமானவர்

122. 'மன்னவனும் நீயோ? வளநாடும் உன்னதோ' என்ற தனிப்பாடல் அடிகளுக்கு உரியவர் :

(A) ஔவையார்

(B) கம்பர்

(C) காளமேகப் புலவர்

(D) பரஞ்சோதி முனிவர்

123. பாரத விலாசம், தாருக விலாசம் போன்ற ஆக்கங்களைத் தந்தவர் :

(A) பகழிக் கூத்தர்

(B) கச்சியப்ப முனிவர்

(C) சிதம்பர சுவாமிகள்

(D) இராமச்சந்திரக் கவிராயர்

124. அன்றைய திறனாய்வாளர்களால் 'அலசல் முறைத் திறனாய்வு' என்று அழைக்கப் பட்ட திறனாய்வு :

(A) விதிமுறைத் திறனாய்வு

(B) பகுப்புமுறைத் திறனாய்வு

(C) பாராட்டு முறைத் திறனாய்வு

(D) மதிப்பீட்டு முறைத் திறனாய்வு

125. பாலி மொழி எந்த நூற்றாண்டில் வ
வடிவம் பெற்றது ?

(A) கி.மு. 1 ஆம் நூற்றாண்டு

(B) கி.மு. 14 ஆம் நூற்றாண்டு

(C) கி.மு. 7 ஆம் நூற்றாண்டு

(D) கி.மு. 3 ஆம் நூற்றாண்டு

126. பட்டியல் - I ஐப் பட்டியல் - II உடன்
பொருத்தவும் :

| பட்டியல் - I | | பட்டியல் - II | |
|---|---|---|---|
| | தொகுப்பாசிரியர் | | பழமொழித் தொகுப் |
| (a) | சாலை இளந்திரையன் | (i) | பழமொழிகளில் வேளாண்மை அறிவியல் |
| (b) | கி.வா. ஜெகந் நாதன் | (ii) | சமுதாய நோக்கில் பழமொழிகள் |
| (c) | வ. பெருமாள் | (iii) | தமிழ்ப் பழமொழிகள் |
| (d) | ந.வீ. ஜெய ராமன் | (iv) | பல நோக்கில் பழமொழிகள் |

(A) (a) - (ii), (b) - (iii), (c) - (iv), (d) - (i)

(B) (a) - (ii), (b) - (i), (c) - (iii), (d) - (iv)

(C) (a) - (iii), (b) - (i), (c) - (iv), (d) - (ii)

(D) (a) - (ii), (b) - (iv), (c) - (i), (d) - (iii)

127. அமைப்பியல் திறனாய்வின் இரு பெரு
சிந்தனையாளர்கள் :

(A) கிக்மண்ட் பிராய்டு, பெர்டினட் சசுர்

(B) சோவஸ்டர், ழூரியர் ஸ்பார்க்

(C) பெர்டினட் சசுர், கிளாடு லெவிஸ் டிராஸ்

(D) கிக்மண்ட் பிராய்டு, ழூரியர் ஸ்பார்க்

128. **கூற்று-1** : 18, 19 -ஆம் நூற்றாண்டு வரை தனிப்பாடல்கள் மிகுதியாகத் தோன்றின.

**கூற்று-2** : 18, 19 -ஆம் நூற்றாண்டிற்கும் தனிப்பாடல்கள் வகைமைக்கும் தொடர்பில்லை.

(A) **கூற்று 1** தவறு **கூற்று 2** சரி

(B) **கூற்று 1** சரி **கூற்று 2** தவறு

(C) **கூற்று 2** சரி **கூற்று 1** தவறு

(D) **கூற்று 1** மற்றும் **கூற்று 2** தவறு

129. திறனாய்வு என்பது :

(a) எல்லையற்ற பரப்பினைக் கொண்டது

(b) திறனாய்வில் தவறுகள் ஏற்படலாம்

(c) நம்பகத் தன்மையற்றது

(d) சுதந்திரமானது

இவற்றுள் சரியானது :

(A) (a), (b), (d) மட்டும்

(B) (b), (c), (d) மட்டும்

(C) (a), (b), (c) மட்டும்

(D) (a), (c), (d) மட்டும்

130. திறனாய்வு வரலாற்றின் பயன் :

(A) திறனாய்வாளரின் தனிப்பட்ட கருத்துகளை அறியலாம்

(B) கருத்து ஒற்றுமை வேற்றுமைகளை அறியலாம்

(C) பொதுவான கருத்தை அறியலாம்

(D) திறனாய்வு இலக்கியம் தோன்றிய அக்கால வாழ்வியலை அறியலாம்

131. 18 -ம் நூற்றாண்டில் துணைவினைகள் முக்கிய வினைகளுடன் இணைந்து ஒரே அலகாகக் கொண்டு செயல்படுகிறது எனக் கூறியவர் :

(A) கால்டுவெல்

(B) பெஸ்கி

(C) வீரமாமுனிவர்

(D) ஏகோஜி

132. 'தமிழ்மொழியின் உபநிடதம்' என்று யாருடைய பாடல்கள் அழைக்கப் பெறுகின்றன ?

(A) பட்டினத்தார்

(B) ஔவையார்

(C) குருஞானசம்பந்தர்

(D) தாயுமானவர்

133. ஒப்பிலக்கணம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் :

(A) கால்டுவெல்

(B) அடெலுங்

(C) பல்லாஸ்

(D) வான் கிலேகல்

134. 'செல்வத்துப் பயனே ஈதல்' - இடம் பெற்ற நூல் :

(A) அகநானூறு

(B) ஐங்குறுநூறு

(C) புறநானூறு

(D) குறுந்தொகை

135. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஓசை | (i) | சிறுபெண்கள் |
| (2) | செரு | (ii) | பொரியல் |
| (3) | பெற்றம் | (iii) | வயல் |
| (4) | சிறுமியர் | (iv) | பசு |

(A) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)
(B) (1) - (iv), (2) - (ii), (3) - (iii), (4) - (i)
(C) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)
(D) (1) - (ii), (2) - (iii), (3) - (iv), (4) - (i)

136. ''கற்றவனுக்கு எந்நாடும் தன்நாடே;
எவ்வூரும் தன்னூரே'' - என்று கருத்துரைக்கும் நூல்கள் :

(A) திருக்குறள், பழமொழி
(B) திருக்குறள், இன்னா நாற்பது
(C) திருக்குறள், இனியவை நாற்பது
(D) திருக்குறள், களவழி நாற்பது

137. ''குன்றத்தூர் சேக்கிழான் மாதேவடிகள் ராம தேவனான உத்தம சோழப் பல்லவராயன்''
- இதில் சேக்கிழான் என்பது :

(A) ஊர்ப்பெயர்
(B) இயற்பெயர்
(C) பட்டப்பெயர்
(D) குடிப்பெயர்

138. உலக மொழிகள் அனைத்திலும் உள் ஒட்டுநிலை மொழிகளை ஒன்று சேர்த் ஆய்வு நடத்தியவர் யார் ?

(A) கால்டுவெல்
(B) அன்னுபன்னு அக்கோலா
(C) பெஸ்கி
(D) மு. வரதராசன்

139. ஈன்றாளை ஓம்பாவிடல் ________.

(A) அழகு
(B) இனிது
(C) இன்னாதது
(D) நன்று

140. வாரணம் என்பது :

(A) திசைச்சொல்
(B) திரிசொல்
(C) இயற்சொல்
(D) வடசொல்

141. What is the test intended to measure computational skills like addition, subtraction multiplication and division ?

(A) Reliability Test

(B) Measurement Test

(C) Validity Test

(D) Evaluation Test

141. கூட்டல், கழித்தல், பெருக்கல் மற்றும் வகுத்தல் போன்ற கணக்கீட்டுத் திறன்களை அளவிடுவதற்கான சோதனை எது ?

(A) நம்பகத்தன்மை சோதனை

(B) அளவீட்டுச் சோதனை

(C) ஏற்புடமை சோதனை

(D) மதிப்பீட்டு சோதனை

142. Comparing of unknown quantity with a known quantity which is expressed as numerical unit means ________.

(A) Educational Measurement

(B) Educational Evaluation

(C) Educational Test

(D) Educational Achievement

142. தெரியாத அளவை தெரிந்த அளவோடு எண் அலகு வழியாக ஒப்பிட்டு வெளிப்படுத்துவது ________.

(A) கல்விசார் அளவீடு

(B) கல்விசார் மதிப்பீடு

(C) கல்விசார் தேர்வு

(D) கல்விசார் அடைவு

143. In the context of Trial and Error learning, as we increase the number of trials or practice, our performance gradually improves. Thorndike termed this as ________.

(A) Generalization

(B) Manipulation

(C) Mediation

(D) Incremental

143. முயன்று தவறிக் கற்றல் சூழலில் முயற்சி அல்லது செயலின் எண்ணிக்கையினை அதிகப்படுத்துகையில் தமது அடைவுத் திறனும் ஒருசேர அதிகரிக்கும், தார்ண்டைக் இதனை ________ என பெயரிட்டார்.

(A) பொதுமைப்படுத்தல்

(B) கையாளுதல்

(C) இடையீடான

(D) மிகுதிப்பெருக்கம்

144. ________ believed that education is a process of upholding the creative abilities of children and not a process which merely concerned with bookish learning.

(A) Tagore

(B) Vivekananda

(C) Gandhiji

(D) J. Krishnamurti

144. கல்வி என்பது குழந்தைகளின் படைப்புத்-திறன்களை நிலைநிறுத்துவதற்கான ஒரு செயல்முறையாகும். அது வெறும் புத்தகக் கற்றலுடன் தொடர்புடையது அல்ல என்று ________ நம்பினார்.

(A) தாகூர்

(B) விவேகானந்தர்

(C) காந்திஜி

(D) ஜே. கிருஷ்ணமூர்த்தி

145. Which theory can use the business owners to determine category of leadership a management style occupies ?

(A) Grid

(B) Fiedler

(C) Hersey

(D) McGregor

145. தலைமைத்துவ மேலாண்மை பாணியின் வகையை தீர்மானிக்க வணிக உரிமையாளர்களை பயன்படுத்தக்கூடிய கோட்பாடு எது ?

(A) கிரிட்

(B) பிட்லர்

(C) ஹெர்ஷே

(D) மெக் கிரிகர்

146. In Sangam age the teacher is called as ________.

(A) Kanakayar

(B) Guru

(C) Vairakkiyar

(D) Acharyan

146. சங்க காலத்தில் ஆசிரியர் எவ்வாறு அழைக்கப்பட்டார் ________.

(A) கணக்காயர்

(B) குரு

(C) வைராக்கியர்

(D) ஆசார்யன்

147. Who has observed the programme of institutional planning is both a challenge and an opportunity ?

(A) Morris L.

(B) Peter Drucker

(C) Mary Parker

(D) Shri. J.P. Naik

147. நிறுவன திட்டமிடல் என்ற திட்டம் ஒரு சவாலாகவும் வாய்ப்பாகவும் உள்ளது எனக் கண்டறிந்தவர் யார் ?

(A) மோரிஸ் எல்.

(B) பீட்டர் ட்ரக்கர்

(C) மேரி பார்க்கர்

(D) ஸ்ரீ. ஜே.பி. நாயக்

148. Which organisation pointed the term "Open Educational Resources" ?

(A) WHO

(B) UNICEF

(C) UGC

(D) UNESCO

148. "திறந்த கல்வி வளங்கள்" என்ற சொல்லை சுட்டிகாட்டிய அமைப்பு யாது ?

(A) WHO

(B) UNICEF

(C) UGC

(D) UNESCO

149. FICCI Higher Education Summit on "Higher Education at the crossroads : Imperatives for policy and practice" has urged the colleges to show a lead in it's report of ________.

(A) 2002
(B) 2008
(C) 2016
(D) 2022

149. 'குறுக்கு சந்திப்புகளில் உயர்கல்வி : கொள்கை மற்றும் நடைமுறைக்கான அவசியங்கள்' என்ற தலைப்பில் FICCI உயர்கல்வி உச்சிமாநாடு அதன் ________ அறிக்கையில் கல்லூரிகள் முன்னிலை வகிக்க பரிந்துரைத்துள்ளது.

(A) 2002
(B) 2008
(C) 2016
(D) 2022

150. The personality develops through eight stages across the life span, said by :

(A) Erik Erikson
(B) Albert Bandura
(C) B.F. Skinner
(D) Kohlberg

150. ஆளுமை வளர்ச்சி வாழ்நாள் முழுவதும் எட்டு நிலைகள் வழியாக உருவாகிறது என்று கூறியவர்________.

(A) எரிக் எரிக்சன்
(B) ஆல்பர்ட் பந்துரா
(C) B.F. ஸ்கின்னர்
(D) கோல்பெர்க்

151. Which of the following is NOT a principle of curriculum development ?

(A) Relevance
(B) Flexibility
(C) Teacher-centeredness
(D) Continuity

151. பின்வருவனவற்றில் எது கலைத்திட்ட மேம்பாட்டின் கொள்கை அல்ல ?

(A) பொருத்தம்
(B) நெகிழ்வுத்தன்மை
(C) ஆசிரியர் மையப்படுத்தபட்ட தன்மை
(D) தொடர்ச்சி

152. In Observation, Projection, Interview and Rating scales, the commonly employed tool was ________.

(A) Percentage tool
(B) Quantitative tool
(C) Qualitative tool
(D) Grades tool

152. உற்றுநோக்கல், கணிப்பு, நேர்காணல் மற்றும் தர அளவுகோல்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் கருவியானது ________.

(A) சதவீத கருவி
(B) எண்ணளவு கருவி
(C) தரநிலை கருவி
(D) தரமதிப்புக் கருவி

153. Who said that, "All experiences of the child for which the school accepts responsibility" ?

(A) W.B. Ragan
(B) Hawes
(C) Tanner
(D) Alan Block

154. A person having less than 20/200 vision acuity is called :

(A) Partially blind
(B) Totally blind
(C) Legally blind
(D) Colour blind

155. Parental spending on School Education, the costs of sending a child to school in India, the survey was done under the aegis of Social Development foundation of ________.

(A) ASSOCHAM
(B) PISA-OECD
(C) FICCI
(D) FISME

156. ________ was formulated as a follow-up of the Dakar Framework of Action for Education for all (EFA) made an attempt to link the national policy goals and targets with the global targets of EFA.

(A) Sarva Shiksha Abhiyan
(B) National Plan of Action
(C) Rashtriya Madhyamik Shiksha Abhiyan
(D) Samagra Shiksha Abhiyan

153. ''பள்ளிதான் குழந்தையின் அனைத்து அனுபவங்களுக்கும் பொறுப்பேற்கிறது.'' என கூறியவர் :

(A) W.B. ராகன்
(B) ஹவ்ஸ்
(C) டான்னர்
(D) அலன் பிளாக்

154. ஒரு நபரின் பார்வைக் கூர்மை 20/200 -க்கு குறைவாக இருந்தால் அது ________ எனப்படும்.

(A) பகுதியளவு பார்வையற்றவர்
(B) முழு பார்வையற்றவர்
(C) குறிப்பிட்டயளவு பார்வையற்றவர்
(D) நிறப் பார்வையற்றவர்

155. பள்ளி கல்விக்கான பெற்றோரின் செலவு, இந்தியாவில் ஒரு குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புவதற்கான செலவுகள் ________ அமைப்பின் சமூக மேம்பாட்டு அறக்கட்டளையின் கீழ் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

(A) ASSOCHAM
(B) PISA-OECD
(C) FICCI
(D) FISME

156. அனைவருக்கும் கல்விக்கான Dakar செயல்திட்டத்தின் (EFA) யின் தொடர்ச்சியாக ________ உருவாக்கப்பட்டது. தேசிய கொள்கை இலக்குகள் மற்றும் நோக்கங்களை EFA இன் உலகளாவிய இலக்குகளுடன் இணைக்க முயற்சித்தது.

(A) அனைவருக்கும் கல்வித்திட்டம்
(B) தேசிய செயல் திட்டம்
(C) தேசிய இடைநிலைக் கல்வி இயக்கம்
(D) ஒருங்கிணைந்த பள்ளிக் கல்விக்கான திட்டம்

157. Metaphysics studies that which lies beyond or above the visible ________ world.

(A) Physical
(B) Sociological
(C) Intellectual
(D) Emotional

157. மெய்பொருளியல் என்பது புலப்படும் ________ உலகத்திற்கு அப்பால் அல்லது அதற்கு மேல் இருப்பதை படிப்பது ஆகும்.

(A) இயற்பியல்
(B) சமூகவியல் சார்ந்த
(C) அறிவு சார்ந்த
(D) மனவெழுச்சி சார்ந்த

158. A professional model of Teacher Accountability should be equated to and for adhering to ________.

(A) Results based criterion
(B) Outcomes of learning
(C) Actions and behavioural outcomes of students
(D) Principles of practice

158. ஆசிரியர் பொறுப்புணர்வின் ஒரு தொழில்முறை மாதிரி ________ உடன் சமன்படுத்த வேண்டும் மற்றும் இதனுடன் பின்பற்ற வேண்டும்.

(A) முடிவுகள் சார்ந்த அளவுகோல்
(B) கற்றலின் விளைவுகள்
(C) மாணவர்களின் செயல்கள் மற்றும் நடத்தை விளைவுகள்
(D) செயல்முறையின் கொள்கைகள்

159. The Tyler's Curriculum model was published in the year,

(A) 1948
(B) 1949
(C) 1946
(D) 1947

159. டைலரின் கலைத்திட்ட மாதிரி வெளியிடப் பட்ட ஆண்டு,

(A) 1948
(B) 1949
(C) 1946
(D) 1947

160. According to Galen's classification which bodily fluid is associated with a Hopeful and active personality ?

(A) Yellow Bile
(B) Phlegm
(C) Blood
(D) Black Bile

160. கேலனின் வகைப்பாட்டின்படி எந்த உடல் திரவம் நம்பிக்கையான மற்றும் சுறுசுறுப்-பான ஆளுமையுடன் தொடர்புடையது ?

(A) மஞ்சள் பித்தம்
(B) கபம்
(C) இரத்தம்
(D) கருப்பு பித்தம்

P.T.O.

161. Which one of the following method/approach was advocated by H.E. Armstrong ?

(A) Project method

(B) Problem-solving method

(C) Deductive approach

(D) Discovery approach

161. பின்வருவனவற்றுள் எந்த ஒரு முறை/ அணுகுமுறையை H.E. ஆர்ம்ஸ்ட்ராங் பரிந்துரைத்தார் ?

(A) செயல்திட்ட முறை

(B) சிக்கல்-தீர்த்தல் முறை

(C) உய்த்தறிதற் அணுகுமுறை

(D) கண்டறி அணுகுமுறை

162. "Reliability is the proportion of the true variance in obtained test scores" - said by ________.

(A) Anastasias

(B) Ghiselle

(C) Stodola

(D) Guilford

162. ''நம்பகத்தன்மை என்பது பெறப்பட்ட சோதனை மதிப்பெண்களில் உள்ள உண்மையான மாறுப்பாட்டின் விகிதமாகும்'' எனக் கூறியவர்________.

(A) அனாஸ்டாசியாஸ்

(B) ஹீசெல்ல

(C) ஸ்டோடோலா

(D) கில்ஃபோர்டு

163. Problem centered design was propounded by :

(A) Michael Schiro

(B) Cornbleth

(C) Udoh

(D) Rugg

163. சிக்கலை மையமாகக் கொண்ட வடிவமைப்பை முன்மொழிந்தவர் :

(A) மைக்கேல் சிரோ

(B) கார்ன் ப்லெத்

(C) உடோ

(D) ரக்

164. The excessive consumption of alcohol during pregnancy causes ________.

(A) Heart defects of the baby

(B) Poor blood circulations

(C) Reduce oxygen level

(D) Vision defect

164. கர்ப்ப காலத்தில் அதிகமாக மது அருந்து-வது ________ க்கு காரணமாகிறது.

(A) குழந்தைக்கு இதய கோளாறு ஏற்படுதல்

(B) இரத்த ஓட்ட குறைபாடு

(C) ஆக்ஸிஜன் அளவு குறைதல்

(D) பார்வை குறைப்பாடு

165. __________ was the main proponent of the multifactor theory.

(A) E.L. Thorndike

(B) Spearman

(C) Thurstone

(D) Guilford

165. பன்முகக் காரணி கோட்பாட்டின் முக்கிய ஆதரவாளராக இருந்தவர்__________.

(A) E.L. தாண்டைக்

(B) ஸ்பியர்மேன்

(C) தாஸ்டன்

(D) கில்போர்டு

166. In 2011, how many free open online courses were offered by Stanford University ?

(A) Five

(B) Two

(C) Three

(D) Four

166. 2011-ல் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் எத்தனை திறந்தவெளி இணைய வகுப்புகளை வழங்கியது ?

(A) ஐந்து

(B) இரண்டு

(C) மூன்று

(D) நான்கு

167. Who was the lady freedom fighter of the Tamil Nadu, started the Gandhi Seva Sangam at Burma ?

(A) Leelavathi

(B) Sornammal - Kanniyakumari

(C) Sornammal - Madurai

(D) Lakshmi Ammal

167. தமிழ்நாட்டின் பெண் சுதந்திரப் போராட்ட வீரர்களில் பர்மாவில் காந்தி சேவா சங்கத்தை தொடங்கியவர் யார் ?

(A) லீலாவதி

(B) சொர்ணம்மாள் - கன்னியாகுமாரி

(C) சொர்ணம்மாள் - மதுரை

(D) லட்சுமியம்மாள்

168. To __________ is to concentrate mental activity continuously upon some object, or happing or problem.

(A) Divided Attention

(B) Selective Attention

(C) Sustained Attention

(D) Alternative Attention

168. __________ என்பது ஏதேனும் ஒரு பொருள் அல்லது மகிழ்ச்சி அல்லது பிரச்சினையின் மீது தொடர்ந்து மன செயல்பாட்டை ஒருங்கிணைத்தல் ஆகும்.

(A) பிரிப்பு கவனம்

(B) தேர்ந்தெடுக்கப்பட்ட கவனம்

(C) நீடித்த கவனம்

(D) மாற்று கவனம்

169. Jivakasintamani was written by :
(A) Valmiki
(B) Sekkilar
(C) Kambar
(D) Tiruttakkadevar

170. __________ is dedicated to the spread of International understanding through the medium of Education in every part of the world.
(A) SCERT
(B) UGC
(C) UNESCO
(D) NCERT

171. In what time will ₹ 1,000 become ₹ 1,331 at 10% per annum compounded annually ?
(A) 2 years
(B) 3 years
(C) 4 years
(D) 1 year

172. Which one of the following Rural Development Scheme to develop model villages in India ?
(A) Rashtriya Uchchatar Shiksha Abhiyan
(B) PM Adarsh Gram Yojana
(C) Sansad Adarsh Gram Yojana
(D) Rashtriya Swasthya Bima Yojana

173. Maulana Abul Kalam Azad (MAKA) Trophy 2024 for overall winner conferred to __________.
(A) Lovely Professional University (PB)
(B) Guru Nanak Dev University, Amritsar
(C) Chandigarh University
(D) University of Madras

169. சீவகசிந்தாமணியை எழுதியவர் யார் ?
(A) வால்மீகி
(B) சேக்கிழார்
(C) கம்பர்
(D) திருதக்கதேவர்

170. உலகின் ஒவ்வொரு பகுதியிலும் கல்வி ஊடகம் மூலம் சர்வதேச புரிதலைப் பரப்புவதற்கு __________ அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது.
(A) SCERT
(B) UGC
(C) UNESCO
(D) NCERT

171. ரூபாய் 1,000 ஆனது 10% கூட்டுவட்டியால் அசலுடன் சேரும் போது எவ்வளவு காலங்களில் ரூ. 1,331 ஆக மாறும் ?
(A) 2 வருடங்கள்
(B) 3 வருடங்கள்
(C) 4 வருடங்கள்
(D) 1 வருடம்

172. இந்தியாவில் மாதிரி கிராமங்களை உருவாக்க பின்வரும் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் எது ?
(A) ராஷ்ட்ரிய உச்சத்தர் ஷிக்ஷா அபியன்
(B) பிரதம மந்திரி ஆதர்ஸ் கிராம் யோஜனா
(C) சன்சத் ஆதர்ஸ் கிராம் யோஜனா
(D) ராஷ்ட்ரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா

173. மௌலானா அபுல் கலாம் ஆசாத் (MAKA) விருது 2024 ல் ஒட்டுமொத்த வெற்றியாளர் விருதினை __________ அணி பெற்றது.
(A) லவ்லி புரபசனல் பல்கலைக்கழகம் (பஞ்சாப்)
(B) குருநானக் தேவ் பல்கலைக்கழகம், அமிர்ஸ்டர்
(C) சண்டிகர் பல்கலைக்கழகம்
(D) சென்னைப் பல்கலைக்கழகம்

174. Which of the following best describes Phyletic gradualism ?

(A) Evolution occurs in rapid bursts with long period of stability.

(B) Species change slowly and continuously over long periods.

(C) Evolution is driven by sudden, large scale genetic mutations.

(D) Species remain unchanged throughout their existence.

174. பின்வருவனவற்றில் எது பைலெடிக் படிப்படியான நன்மையை சிறப்பாக விவரிக்கிறது ?

(A) பரிணாமம் நீண்ட கால நிலைத்தன்மையுடன் விரைவான வெடிப்புகளில் நிகழ்கிறது.

(B) இனங்கள் நீண்ட காலத்திற்கு மெதுவாகவும் தொடர்ச்சியாகவும் மாறுகின்றன.

(C) திடீர், பெரிய அளவிலான மரபணு மாற்றங்களால் பரிணாமம் ஏற்படுகிறது.

(D) இனங்கள் அவற்றின் இருப்பு முழுவதும் மாறாமல் இருக்கும்.

175. What is the abbreviation for the organisation IAEA ?

(A) International Atomic Energy Agency

(B) Institute for Acquisition and Enforcement Agency

(C) Institute for Aviation and Enforcement Agency

(D) International Aviation Enforcement Administration

175. IAEA - அமைப்பின் விரிவாக்கம் என்ன ?

(A) சர்வதேச அணுசக்தி நிறுவனம்

(B) கையகப்படுத்தல் மற்றும் அமலாக்க நிறுவனம்

(C) விமானப் போக்குவரத்து மற்றும் அமலாக்க நிறுவனத்திற்கான நிறுவனம்

(D) சர்வதேச விமான அமலாக்க நிர்வாகம்

176. Find the one which is **not** used to launch vehicles in space ?

(A) PSLV

(B) GSLV

(C) HRLV

(D) ALV

176. விண்வெளியில் வாகனங்களை ஏவுவதற்குப் பயன்படுத்தப்படாத ஒன்றைக் கண்டுபிடிக்க :

(A) பி.எஸ்.எல்.வி.

(B) ஜி.எஸ்.எல்.வி.

(C) எச்.ஆர்.எல்.வி.

(D) ஏ.எல்.வி.

177. Identify the portal that facilitates the online courses from class 9 till post graduation to be accessed by anyone anywhere at a time in India.

(A) SWAYAM
(B) DIKSHA
(C) NCRT
(D) PRABHA

178. Find the value of

$\left(1-\frac{1}{3}\right)\left(1-\frac{1}{4}\right)\left(1-\frac{1}{5}\right)\ldots\left(1-\frac{1}{100}\right)$ :

(A) $\frac{1}{50}$
(B) $\frac{1}{25}$
(C) $\frac{1}{100}$
(D) $\frac{1}{75}$

179. Which part of the Indian Constitution deals with Directive Principles of State Policy ?

(A) Part III
(B) Part IV
(C) Part V
(D) Part VI

180. Who among the following conducted excavation works at Arikkamedu ?

(A) Bruce Forte
(B) Sir John Marshal
(C) Martimer Wheeler
(D) Dr. Jagor

-o0o-

177. 9 - ஆம் வகுப்பு முதல் முதுகலைப் பட்டம் வரையிலான ஆன்லைன் படிப்புகளை இந்தியாவில் எங்கும் எவரும் அணுகக்கூடிய வகையில் எளிதாக்கும் போர்ட்டலை அடையாளம் காணவும்.

(A) SWAYAM
(B) DIKSHA
(C) NCRT
(D) PRABHA

178. $\left(1-\frac{1}{3}\right)\left(1-\frac{1}{4}\right)\left(1-\frac{1}{5}\right)\ldots\left(1-\frac{1}{100}\right)$ - ன் மதிப்பு காண்க.

(A) $\frac{1}{50}$
(B) $\frac{1}{25}$
(C) $\frac{1}{100}$
(D) $\frac{1}{75}$

179. அரசு வழிகாட்டி நெறிமுறைகள் பற்றிக் கூறும் இந்திய அரசமைப்பின் பகுதி எது ?

(A) பகுதி III
(B) பகுதி IV
(C) பகுதி V
(D) பகுதி VI

180. கீழ்கண்டவர்களுள் யார் அரிக்கமேடு பகுதியில் அகழ்வாராய்ச்சியை மேற் கொண்டார் ?

(A) புரூஸ் போர்ட்
(B) சர் ஜான் மார்ஷல்
(C) மார்ட்டிமர் வீலர்
(D) Dr. ஜாஹர்

-o0o-